In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi
S.C.No.129/2025
Deposition of P.W.18

| | |
|---|---|
| Name | மருத்துவர் திரு.ரவிபிரதாப்சிங் |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 24th day of March 2026.

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**முதல் விசாரணை :**

நான் தற்போது கி.ஆ.பெ.விசுவநாதன் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை திருச்சியில்சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் 15.12.2024 அன்று தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் போதகராக பணிபுரிந்து வந்தபோது தூத்துக்குடி வடக்கு காவல் நிலைய குற்ற எண்.565/2024 என்ற வழக்கில்சம்பந்தப்பட்ட 82 வயதுடைய செல்லம்மாள் க.பெ.ராமசந்திரன் என்பவரின் பிரேதத்தை பரிசோதனை செய்ய தூத்துக்குடி வடக்கு காவல் நிலையத்தின் ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தை தலைமை பெண் காவலர் 1823 திருமதி.ஜானகி என்னிடம் கொடுத்தார். வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.14. பிரேதத்தை அடையாளம் காட்டினார். பிரேத பரிசோதனை 15.12.2024 அன்று காலை 11.40 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அவருடைய அடையாளங்கள் வலது காலின் மேற்பகுதியில் ஒரு புள்ளி மச்சம் இருந்தது. இடது கால் நடுபகுதியில் ஒரு காயத்தழும்பு இருந்தது. அவரது

நீளம் 155 செமீ அளவு இருந்தது. உடலில் வெளிபுற பரிசோதனையில் அவரது உடல் அழுகுவதால் ஏற்படும் நரம்புகளில் பளிங்கு போன்ற தோற்றம் முகத்திலும். கழுத்தின் முன்பகுதியிலும், இரண்டு புஜங்களின் முன்பகுதியிலும், நெஞ்சின் முன் பகுதியிலும் இரண்டு கைகளின் முன், பின் பகுதிகளிலும், வயிற்றின் பின்பகுதியிலும் காணப்பட்டது. உடலில் வெளிப்புற காயங்கள்

1.4x3 செமீ அளவுள்ளசிராய்ப்பு காயம் வலது காலின் மேற்பகுதியில் இருந்தது.

உடலில் வேறு எந்த வெளிப்புற காயங்களும் காணப்படவில்லை. உடலின் உட்புறபரிசோதனை மண்டைபகுதியை வெட்டி பார்த்ததில் மண்டை சதையில் 8x6 செமீ மண்டை சதை வரை ஆழமுள்ள கருஞ்சிவப்பு கன்றிய காயம் இடது உச்சந்தலையிலும், இடதுசவ்வு பகுதியிலும் இருந்தது. மூளை பகுதியில் வன்சவ்வு மற்றும் சிலந்தி சவ்விற்கு கீழ் ரத்தக்கசிவு உச்சம் படலத்திலும், பிடரி படலத்திலும் மூளையின் இருபுறமும்இருந்தது. மண்டை ஓடு சீராக இருந்தது. வாய் மற்றும் மூக்கு பகுதிகள் சீராக இருந்தது. குரல்வளை சீராக இருநதது. அழுகி இருந்தது. கழுத்து சதைகளிலும், சவ்வுகளிலும் எந்தவித ரத்தக்கசிவும் காணப்படவில்லை. Hyoid எலும்பு சீராக இருந்தது. நெஞ்சு பகுதியை வெட்டி பார்த்ததில நெஞ்செலும்புகள் சீராக இருந்தது. உணவுக்குழாய், மூச்சுக்குழாய் இவைகள் சீராக இருந்தன. நுரையீரல்கள் இளகி இருந்தது. அதை வெட்டி பார்க்கும்போது அழுகி இருந்தது. இருதயம் தளர்ந்து காணப்பட்டது. இதயத்தமனிகள் சுருங்கியும், தடிமனாகவும் காணப்பட்டது. பெருந்தமனியில் சிறுகொழுப்பு படிவங்கள் படிந்திருந்தது. வயிற்று பகுதியை வெட்டி பார்க்கும்போது வயிற்றின் சுவற்றின் பகுதி சீராக இருந்தது. இரைப்பையில் 165 கிராம் பாதி செரிமான உணவு துகள்கள்

இருந்தது. எந்த விதமான வாடையும் இல்லை. சிறுகுடலில் பழுப்பு நிற திரவம் இருந்தது. பெருங்குடல் வீங்கி இருந்தது. கல்லீரல் இளகி இருந்தது. அதன வெட்டுபகுதி அழுகி இருந்தது. மண்ணீரல் இளகி இருந்தது. அதன வெட்டுபகுதி அழுகி இருந்தது. இரண்டு சிறுநீரகமும் இளகி இருந்தது. அதன வெட்டுபகுதி அழுகி இருந்தது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. கர்ப்பப்பை வயதிற்கு ஏற்றாற்போல் இருந்தது. அதனை வெட்டி பார்த்தபோது காலியாக இருந்தது. இடுப்பு எலும்புகள், இடுப்பு சதைகள் சீராக இருந்தது. பிறப்புறுப்பில் வெள்ளைநிற திரவம் காணப்பட்டது. முதுகெலும்புகள், முதுகு தண்டுகள் சீராக இருந்தது. பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் உடல் உள்ளுறுப்புகள் நகதுகள்கள்,மற்றும் பிறப்புறுப்பில் காணப்பட்ட திரவத்தை Swab ல் சேகரித்து பகுப்பாய்விற்காக அனுப்பி வைத்தேன். இவை அனுப்பிய ரசாயன பகுப்பாய்வின் அறிக்கை கிடைக்கப் பெற்று அதனை பரிசீலித்த பின்னர் இறுதி கருத்துரையாக இந்த நபர் தலையில் ஏற்பட்ட மழுங்கி விசை காயத்தினால் இறந்திருக்கக்கூடும் என சான்று வழங்கியுள்ளேன். மேலும் இறந்தவர் 36 மணி நேரத்தில் இருந்து 48 மணி நேரத்திற்குள் இறந்திருக்கக்கூடும் என்று சான்று அளித்தேன். என்னுடைய இறுதி கருத்துரையுடன் கூடிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.15. 31.12.2024 ம் தேதியிட்ட உள்ளுறுப்பு பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.16. பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட தடயங்களில் விந்து மற்றும் விந்தணுக்கள் காணப்படவில்லை என்று வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.17. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

பிண பரிசோதனை வேண்டுகோள் கடிதத்துடன் வழக்கின் சரித்திரம் இணைத்து தரப்பட்டது என்றால் சரிதான். பெண் காவலர் பிரேதத்தை

என்னிடம் ஒப்படைக்கும்போது காலை மணி 11.30 என்றால் சரிதான். என்னிடம் ஒப்படைத்த 10 நிமிடங்களில் பிரேத பரிசோதனை தொடங்கியது என்றால் சரிதான். நான் பரிசோதனை செய்ததில் வலதுபுறகாலில் காணப்பட்ட சிராய்ப்பு காயத்தை தவிர வேறு வெளிப்புற காயங்கள் உடலில் காணப்படவில்லை என்றால் சரிதான். தலையில் ஏற்பட்ட மழுங்கிய விசை காயம் தவிர கழுத்து நெறிப்பட்டிருந்ததாகவோ, மூச்சு திணறல் ஏற்பட்டிருந்ததாகவோ சான்றில் துலங்காது என்றால் சரிதான். தலையில் காணப்படும் காயம் நாள்பட்ட காயமாக இருக்கலாம் என்றால் சரியல்ல, புதிதாக ஏற்பட்ட காயமாகவும் இருக்கலாம். பிண விறைப்புதன்மை ஒரு நபர் இறந்து 2 மணிநேரத்தில் துவங்கிவிடும் என்றால் சரிதான். உடல் முழுக்க விறைப்புதன்மை பரவி முடிவதற்கு 36 மணிநேரம் ஆகும் என்றால் சரிதான். இறப்பின் நேரத்தை விறைப்பு தன்மை, தசைநிறம்,உடல் வெப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் என்றால் சரிதான். குளிர்சாதன அறையில் வைக்கப்படும் பிணம் எத்தனை நாள் ஆனாலும் அழுகாமல் இருக்கும் என்றால் அவ்வாறு கூற இயலாது. குளிர்சாதன அறையில் வைத்தால் அழுகும் வேகம் மட்டுமே குறையும். நான் மருத்துவவிதிக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குளிர்சாதன அறையில் வைக்கப்பட்ட பிணத்திற்கு அதனுடைய வெப்பத்தை கணிக்க முடியாது என்றால் சரிதான். குளிர்விறைப்புதன்மை தான் இருக்கும் என்றாலும் மரண விறைப்பு தன்மையை கணிக்க முடியாது என்றாலும் இவ்வழக்கில் இறப்பிற்குபின்வரும் பிரேத அழுகுதல் தன்மையை வைத்து இறந்த நேரத்தை குறிப்பிட்டுள்ளேன். அடையாளம் தெரியாத பிரேதங்கள் குளிர்சாதன வைப்பறையில் பாதுகாக்கப்படும் என்றால் சரிதான். பிணம் அடையாளம் காணப்படும் வரை கெட்டுபோகாமல் இருப்பதற்காக குளிர்சாதன அறையில் வைக்கப்படுகிறது என்றால்

சரிதான். குளிர் சாதன வைப்பறையில் வைக்கப்படும் பிரேதத்தை உடனடியாக எடுத்து பிரேத பரிசோதனையை தொடங்க முடியாது என்றாலும், வெளியே சுமார் 2 மணிநேரம் வைத்தபிறகு துவங்க முடியும் என்றாலும் எல்லா வழக்கிலும் அவ்வாறு செய்ய முடியாது, இது பொதுவான நடைமுறை என்றால் சரிதான். பிண வைப்பறையில் வைப்பதற்கு முன்பு அந்த பிரேதத்தில் பிணவிறைப்பு தன்மை ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு ஏற்படாது என்றாலும் குளிர்சாதன அறையில்இருந்து எடுத்து 2 மணிநேரம் கழித்து பார்த்தாலும் அதேநிலையில் இருக்கும் என்றாலும் சரிதான், அதேபோல் அழுகிய பிரேதத்தை குளிர் சாதன அறையில் வைக்கும்போது என்ன அழுகிய மாற்றங்கள் இருந்ததோ அதேதான் குளிர் சாதன அறையில் இருந்து எடுத்த பிறகும் இருக்கும். என்னுடைய கருத்தின்படி இவ்வழக்கின் பிரேதம் அழுகிய நிலையில் தான் குளிர் சாதன அறையில் வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். பிரேதம் அரசு மருத்துவமனையில் 14.12.2024 அன்று மாலை 5.40 மணிக்கு ஒப்படைக்கப்பட்டதாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். நான் கூறிய கருத்தின்படி மரணம் 12.12.2024 ல் மாலை 5.40 மணியளவில் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால் இருக்கலாம். உடல் அழுக துவங்கும்போது உடலின் மென்மையான தசைகள் அழுக ஆரம்பித்துவிடும் என்றால் சரிதான். நான் சரிவர பிரேத பரிசோதனை செய்யாமல் ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க சான்று வழங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவவிதிபடி குளிர் சாதன அறையில் வைக்கப்பட்ட பிணத்தின் இறப்பு நேரத்தை உடனடியாக கணித்து சொல்ல முடியாது என்றால் துல்லியமாக கணித்து சொல்லமுடியாது. தலையில் ஏற்பட்ட காயம் இறந்த நபர் கீழே விழுந்ததால் ஏற்பட்ட நாள்பட்ட ஊமைக் காயம் என்றாலும் அதனை வழக்கிற்காக

சம்பவ நேரத்தில் ஏற்பட்டதாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல, இவ்வழக்கில் உள்ள மண்டை ஓட்டில் உள்ள காயம் கீழே விழுவதால் வருவதற்கு வாய்ப்பில்லை. இறந்தநபர் அவருடைய வயது மூப்பின் காரணமாகவும், நாள்பட்ட காயத்தின் காரணமாகவும் இறந்துள்ளார் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/—எம்.பி.முருகன்,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.